# Prahladalvan Charithai

## A Few Opinions

"Prahlada Charitram is well-written. I am sure it will become popular among High School and College students"-T. CHELVAKESAVARAYA MUDALIAR ESQR. M.A., PACHAIAPPA'S COLLEGE, MADRAS.

---

"வேலூர்க்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர், தமிழில் வசன நடையாக இயற்றிய பிரகலாதாழ்வான் சரிதையென்னும் புஸ்தகம், தெளிந்த இனிய நடையில் எழுதப்பெற்றிருந்தலின், மிக்க இன்பத்தை விளைவிக்கின்றது. இதனுள் அங்கங்கே எடுத்துக் காட்டப்பெற்றிருக்கும் சிறந்த பாடல்களும் படிப்போருடைய மனத்தைக் கவர்ந்து இன்புறுத்துமென்று எண்ணுகிறேன். இதனை இயற்றியவர் வடமொழியிலும் தென்மொழியிலும் நல்ல பயிற்சியுள்ளவரென்பது இதைப் படிக்கும்போது புலனாகின்றது. வசனநூல்களைப் படிக்க விரும்புவோர் இதனைவாங்கிப்படிப்பார்களாயின், இந்த நூலாசிரியரால், இதுபோன்ற இன்னும் சில நூல்களைத் தமிழ்நாடு பெற்று மகிழ்வடையுமென்று நினைக்கிறேன்." — மஹாமஹோபாத்தியாய பிரஹ்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை.

---

"தங்கள் பிரகலாதாழ்வான்சரிதையும் மார்க்கண்டேய சரிதமும் வாசித்துப்பார்த்தேன். அவ்விரண்டையும் செவ்வையாய் வாசிப்பவர்களுக்குப் பிழையின்றி வசனிப்பதற்கும் எழுதுவதற்கும் தக்க திறமையுண்டாகுமென்று திடமாய்க் கூறுவேன்."—ம-ள-ள-ஸ்ரீ. ஜி. கமலநாத முதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர், முனிஸிபல் ஹைஸ்கூல், வாலாஜாநகர்.

---

"பண்டிதர் பாமரர் எல்லாருக்கும் ரஸம் தருவதான இக்கதையை நமது நண்பர் வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் வசன நடையில் எழுதி வெளியிட்டது. அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரத்தக்கதே."—இந்து நேசன்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

# விவேகசிந்தாமணி

(சிறுவர்க்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்யுட்டிரட்டு)

[அரும்பதவுரையுடன்]

---

வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

பு. ந. ஸ்ரீநிவாஸாசாரியரால்

வேலூர்.

சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

[காபிரைட் ரெஜிஸ்டர் செய்தது]

---

1912

[விலை அணா ஒன்றரை]

# முகவுரை

அரிய பெரிய நீதிகளையும் மற்றுஞ்சில விஷயங்களையும் சிறுவர்க்கு ஏற்ற எளிய நல்ல செய்யுள்நடையில் தெரிவிக்கும் சிறந்த நூலாகிய இவ்விவேகசிந்தாமணி, பல சிறுபள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்பட்டு வருதல் யாவரும் அறிந்ததே. இந்நூல் கற்பிக்கப்படுதல் மிகவும் நன்றே. ஆயின், இச்சிறந்த நீதிநூல் கற்பிக்கப்படும் முறையோ குறையுற்றிருக்கின்றது: அஃதாவது இந்நூலுக்குத் தக்க உரையின்மையாலோ பிறகாரணங்களாலோ மாணக்கர்கள் பொருளறியாமற்செய்யுள்களைப்பாடம்பண்ணும்படி கற்பிக்கப்படுதலேயாம்.

இக்குறையோடு, பிழையில்லாத நல்ல சுத்தப்பதிப்புப்புஸ்தகம் தக்கவுரையுடன் கூடியது கிடைக்காமல், அச்சுக்கு ஏற்காத விகாரமான காகிதமும் பிழைகள்மலிந்த விரும்புதற்காகாத அச்சும் சிறவாத உரையும் உள்ள புஸ்தகம் கிடைத்தலால் ஆகுங் குற்றங்குறையுஞ் சேர, இந்நூற்படிப்பு எவ்வளவு தாழ்ந்தநிலையில் இருக்குமென்பது யாவரும் அறியக்கூடியதே.

இங்ஙனம் இந்நூற்கல்வி மிகவும் சீர்கேடு அடைந்துள்ள நிலையில், அறிஞர் சிலர், இவற்றையெல்லாம் ஆலோசித்து, குற்றங்குறைகளை அகன்றால் இந்நூற்கல்வி சிறக்குமென அறிந்து, நீதிநூற்படிப்பு முக்கியமாகப் பள்ளிக்கூடங்களில் இருக்கவேண்டுமென்றும், மற்றும், பெற்றோர்கள் தம்மக்களை இந்நூலையும் வேறு சில நூல்களையும் படிக்கவேண்டுமென்று விரும்புதலின் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுதற்காகவும் இந்நூல் பாடபுத்தகமாக வேண்டுமென்றுங் கருதி, என்னை அபிமானித்து இந்நூலையும் மற்றுஞ்சில நூல்களையும் தக்க அரும்பதவுரையோடு நல்ல சுத்தப்பதிப்பாக வெளியிட்டுத்தருதல் நலமென அன்புடன் உரைத்தமையின், இந்நூலை அவர்கள்கருத்திற்கேற்ப வெளியிடலானேன்.

இந்நூலிலுள்ள பாடல்களிற் பல, சிறுவர் கற்றற்கு ஏற்காத சிருங்காரரஸவிஷயங்களும் மற்றுஞ்சில இடக்கர்களும் அடங்கியனவாயிருப்பதனால், அவை விலக்கப்பட்டன. இப்புத்தகத்தில் 50-க்குக்

குறையாத செய்யுள்கள் இருக்கவேண்டுமென்பது, இந்நூலை வெளியிடும்படி கட்டளையிட்ட கனவான்களுக்கும் எனக்கும் உத்தேசமாதலின், சாரமான செய்யுள்கள் தேர்ந்தெடுக்கையில் 50-க்குக் குறைந்ததனால், கம்பராமாயணத்தினின்று சிறந்த நான்கு நீதிச் செய்யுள்களும் நான் இதற்கெனச் செய்த மூன்றுகவிகளும் இப்புத்தகத்தில் ஈற்றிற் சேர்த்திடலானேன். 47, 50-கம்பராமாயணச்செய்யுள்கள். ஈற்றிலுள்ள மூன்றும், யான் இயற்றியவை.

செய்யுள்களுக்குப் பதவுரை கருத்துரை முதலியனவெல்லாம் விவரமாகச் சேர்த்தால் அதனால் படிப்பவர்க்கு நூல் மிக எளிதாயிருக்குமாயினும், அங்ஙனஞ்செய்தலில் கற்பவர்கள் யாதொரு தன் முயற்சியுமின்றி வெறுங் குருட்டுப்பாடமாக நெட்டுருச்செய்து அதனால் அறிவு நிரம்பப்பெறாரென்று அறிஞர் பலர் கருதுகின்றனராதலின், இன்றியமையாததும் சுருக்கமும் கூடியவரையில் தெளிவுமான அரும்பதவுரைமாத்திரம் எழுதிச் சேர்த்திடலானேன். கடினமான சிற்சிலஇடங்களிற் கருத்துரையும், சிற்சிலஇடங்களில் மேற்கோள்களும் காட்டப்பட்டுள்ளன.

இந்நூலிலுள்ள செய்யுட்கருத்துகள் மிகச்சிறந்தனவாதலின், பெரிய கலாசாலைகளிற் கற்கும் மாணாக்கர்களும் பிறருங்கூட இந்நூலைப் படித்தறிதல் தகும்.

கல்வித்துறையிலுள்ள அதிகாரிகளும் சிறு பள்ளிக்கூடங்களிலும் பெரியகலாசாலைகளிலுமுள்ள உபாத்தியாயர்களும் தமிழ்ப் பண்டிதர்களும் இப்புத்தகத்தை அபிமானித்து, எனக்கு ஊக்கந் தரும் உதவி புரிவார்களென எதிர்பார்க்கின்றேன்.

இந்நூற்பதிப்பு இன்னுஞ் சீர்திருந்துதற்காக உபாத்தியாயர்களும் மற்றும் அறிஞர்களும் தகுதியாக வெளியிடும் அபிப்பிராயங்களெல்லாம் வந்தனத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அடுத்தபதிப்பில் அத்தகைய சீர்திருத்தம் செய்யலாகும்.

வேலூர்
1912ஆ ஏப்ரில்மீ 10உ

பு. க. ஸ்ரீ.

கடவுள் துணை

# விவேக சிந்தாமணி

## (அரும்பத வுரையுடன்)

இது, விவேகத்தைத்தரும் சிந்தாமணிபோற் சிறந்த நூல் என்று பொருள்படும். சிந்தாமணி-நினைத்தவற்றைத்தரும் ஒரு வகைச்சிறந்த தேவரத்தினம். இந்நூலிலுள்ள செய்யுள்கள்-பலபுலவர்களாற் பாடப்பட்டவை.

### காப்பு

அல்லல்போம் வல்வினைபோ மன்னைவயிற் றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத்துயரம்போம்-நல்ல
குணமதிகமா மருணைக்கோபுரத்துண் மேவுங்
கணபதியைக் கைதொழுதக்கால்.

காப்பு-காக்கும் கடவுள் விஷயமான ஸ்தோத்திரம். அல்லல்-துன்பம். வல்வினை-வலிய (சஞ்சித) கருமம். பிறந்த-பிறந்ததற்குக் காரணமான. தொல்லை-பழமை, தொந்தரை; இது, இங்குப்பிராரப்த கருமத்தைக் குறிக்கும். போகாத்துயரம் என்பது-அதற்குக் காரணமான இப்பிறப்பில் தேடப்பட்ட ஆகாமியவினையை யுணர்த்தும்.

## நூல்

1. ஆபத்துக் குதவாப்பிள்ளை
யரும்பசிக் குதவாவன்னந்
தாபத்தைத் தீராத்தண்ணீர்
தரித்திர மறியாப் பெண்டீர்
கோபத்தை யடக்காவேந்தன்
குருமொழிகொள்ளாச்சீடன்
பாபத்தைத் தீராத்தீர்த்தம்
பயனில்லை யேழுந்தானே.

அரும்பசி-பொறுத்தற்கரிய பசி. பெண்டிர்-மனைவி.

2. குக்கலைப்பிடித்து நாவிக்கூட்டினி லடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சள் பூசி மிருகமணஞ்செய்தாலுந்தான்
அக்குலம்வேறதாமோ வதனிடம் புனுகுண்டாமோ
குக்கலே குக்கலல்லாற் குலந்தனிற் பெரியதாமோ.

குக்கல்-நாய். நாவிக்கூட்டினில்-புனுகுபூனை வசிக்கத்தக்க கூட்டில்; நாவி-கஸ்தூரிமிருகமுமாம். மிக்கது-மேன்மைபொருந்திய. மிருகமணம்-மிக்க வாசனை. அக்குலம் வேறதாமோ-அந்த நாய்க்குலத்திற்குரிய இழிகுணம்போய் அதற்கு வேறுநற்குணம் வருமோ?

3. ஒப்புடன்முகமலர்ந்தே யுபசரித் துண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலு முண்பதே யமுதமாகும்

முப்பழமொடு பாலன்னம் முகங்கடுத் திடுவராகின்
கப்பியபசியினோடு கடும்பசியாகுந்தானே.

ஒப்பு-மனமொத்த அன்பு, சம்மதம். முகம் மலர்ந்து-சந்தோஷமுகத்தோடு. முப்பழம்-மா, பலா, வாழை இவற்றின் பழம். முகம் கடுத்து-முகம் சுளித்து. கப்பிய பசியினோடு-மூடிக்கொண்டுள்ள [மிருந்த] முன்னுள்ள பசியோடு. கடும் பசி-மிகக்கொடிய பசி: முன்புள்ள பசியினும் மிக்க கொடியபசியென்க.

4. கதிர்பெறுசெந் நெல்வாடக்
கார்க்குலங் கண்டுஞ்சென்று
கொதிதிரைக்கடலிற்பெய்யுங்
கொள்கைபோற் குவலயத்தே
மதிதனம்படைத்தபேர்கள்
வாடினோர்முகத்தைப்பாரார்
நிதிமிகப்படைத்தோர்க்கீவர்
நிலையிலார்க்கீயமாட்டார்.

கதிர்-நெற்கதிர். கார்க்குலம்-மேகக்கூட்டம். கொதி திரை கடலில்-பொங்குந்தன்மையுள்ள அலைகளையுடைய சமுத்திரத்தில். கொள்கை-விதம். குவலயம்-பூமி. மதிதனம்-நன்குமதிக்கப்படுகின்ற செல்வம். நிதி-செல்வக்குவியல். நிலையிலார்க்கு-(ஓரிடத்தில்) நிலையாயில்லாமல் அலைந்து திரிந்துவாடுகின்ற தரித்திரர்களுக்கு. "பொன்னிறச் செந்நெற்பொதியொடு பீள்வாட, மின்னொளிர் வானம் கட

லுள்ளும் கான்றருக்கும், வெண்மை யுடையார் விழுச்செல்வம் எய்தியக்கால், வண்மையும் அன்னதகைத்து" என்ற நாலடியார்ச் செய்யுளோடு இச்செய்யுளை ஒப்பிடுக.

5. ஆலிலை பூவுங்காயு மளிதருபழமு முண்டேல்
சாலவே பட்சியெல்லாந் தங்குடியென்றேவாழும்
வாலிபர்வந்துதேடி வந்திப்பார் கோடிகோடி
ஆலிலையாதிபோன லங்குவந்திருப்பாருண்டோ.

அளிதரு-கனிந்த. சாலவே-மிகவும். வந்துதேடி என்பதைத் தேடிவந்து என மாற்றுக. வந்திப்பார்-(குளிர்ந்த நிழல்முதலியன தருதல்பற்றி) வணங்குவார்கள். கோடிகோடி-பலகோடி. ஆலிலை ஆதி-ஆலிலை முதலியன. இச்செய்யுளிலுள்ள உபமானக்கருத்து-ஒருவனிடம் செல்வமுள்ள காலத்தில் மிகப் பலர் வந்தடைதலும், அச்செல்வம் நீங்கியவளவில் அவனிடம் ஒருவரும் சேராமல் விலகி விடுதலுமாகிய உபமேயக்கருத்தை உணர்த்தும்.

6. தண்டாமரையினுடன்பிறந்துந்
தண்டேனுகரா மண்டூகம்
வண்டோ கானத்திடையிருந்தும்
வந்தே கமலமதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலு
மறியார்புல்லோர் நல்லோரைக்

கண்டே களித்தங் குறவாடித்
தம்மிற் கலப்பார் கற்றோரே.

தண் தாமரை-குளிர்ந்த தாமரைமலர். உறைந்தும்-வசித்திருந்தும். நுகரா-உண்ணு. மண்டூகம்-தவளை. கானத்திடை-காட்டில். கமலம் மது-தாமரைமலரிலுள்ள தேன். பண்டே-முன்னேயே; வெகுநாளாக. புல்லோர்-அற்பர்; புல்லறிவுடையோர். களித்து-மகிழ்ந்து. அங்கு-அசை.

7. வானர மழைதனி னனையத் தூக்கணந்
தானொருநெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமுங் கல்வியு நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடி லிடரதாகுமே.

தூக்கணம்-ஓர்குருவி. நெறி-வழி; உபாயம், முறை: வீடு கட்டிக்கொள்க வென்ற உறுதிமொழி. தாண்டி-தாவி. நவின்ற நூல்களும்- (சிறந்தனவென்று) சொல்லப்பட்ட நூற் கல்விகளையும். ஈனர்-இழிந்தோர். இடர்-துன்பம். இக்கதையைப் பஞ்சதந்திரத்திற் காண்க.

8. கற்பகத் தருவைச்சார்ந்த காகமு மமுதமுண்ணும்
விற்பனவிவேகமுள்ள வேந்தனைச்சேர்ந்தோர்வாழ்வார்
இப்புவிதன்னிற் கிள்ளை யிலவுகாத்ததனைப்போல
அற்பரைச்சேர்ந்தோர்வாழ்வ தரிதரிதாகுமம்மா.

கற்பகத்தரு-கற்பகவிருக்ஷம்; இது, தேவலோகத்திலுள்ளது. விற்பனம்-கல்வியறிவு, புலமை. கிள்ளை-கிளி. அரிது-அருமையானது; கஷ்டம்; இது இல்லையென்பதையும் உணர்த்தும். அம்மா-ஆச்சரியம்.

9. ஆலகால விடத்தையு நம்பலா
மாற்றையும் பெருங்காற்றையு நம்பலாங்,
கோலமா மதயானையை நம்பலாங்
கொல்லும் வேங்கைப்புலியையு நம்பலாங்
காலனார்விடுதூதனை நம்பலாங்
கள்ளர் வேடர் மறவனை நம்பலாஞ்
சேலைகட்டியமாதனை நம்பினாற்
றெருவினின் று தியங்கித் தவிப்பரே.

ஆலகாலவிடம்-ஹாலாஹல மென்னும் விஷம்; இது, தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த காலத்துத் தோன்றியது. கோலம் மா மதம் யானை-அழகிய பெரிய மதம் பிடித்த யானை. காலனார்-யமதர்மாராஜன். மாதர் என்பது, இங்குத் தீயமகளிரைக் குறிக்கும். தியங்கி-சோர்ந்து, கலங்கி, மயங்கி.

10. சங்குவெண்டாமரைக்குத்
தந்தைதா யிரவிதண்ணீர்
அங்கதைக் கொய்துவிட்டா
லழுகச்செய் தந்நீர் கொல்லுந்

துங்கவன்கரையிற் போட்டாற்
சூரியன் காய்ந்துகொல்வான்
தங்களி னிலைமைகெட்டா
லிப்படித் தயங்குவாரே.

சங்கு வெண் தாமரை-சங்குபோல் வெண்மையாகிய தாமரை மலர்: வெண்டாமரைமலர்; இங்குவெண்டாமரையைக்குறித்திருப்பினும், செந்தாமரையையும் உடன்கூட்டிக்கொள்க. ‘சங்கம்’ என்ற பாடங்கொண்டால், அதற்கு அழகு என்னும் பொருள். இரவி-சூரியன். தாமரை சூரியனைக்கண்டு மலர்வதாதலால், அதற்குச் சூரியன் தந்தையாகக் கூறப்பட்டான். தாமரை நீரினின்று தோன்றுதலால், அதற்குநீர் தாயாகக் கூறப்பட்டது. தாமரைக்குத் தந்தை-இரவி, தாய்-தண்ணீர் என முறையே கூட்டிக்கொள்க. அதை-அத்தாமரையை. துங்கம் வன் கரை-உயர்ந்த வலிய நீர்க்கரை. தயங்குவார்-இளைப்பார், கேடுறுவர்.

11. நாய்வாலை யளவெடுத்துப் பெருக்கித் தீட்டி
னற்றமிழை யெழுத வெழுத்தாணியாமோ
பேய்வாழுஞ் சுடுகாட்டைப் பெருக்கித்தள்ளிப்
பெரியவிளக் கேற்றிவைத்தால் வீடதாமோ
தாய்வார்த்தை கேளாத சகசண்டிக்கென்
சாற்றிடினு முலுத்தகுணந் தவிரமாட்டான்
ஈவாரை யீயவொட்டா னிவனுமீயா
னெழுபிறப்பிலுங் கடையா மிவன்பிறப்பே.

அளவு எடுத்து-எழுத்தாணியளவாக எடுத்து. பெருக்கி-நீட்டி. நற்றமிழ்-சிறந்த தமிழ். பெருக்கித்தள்ளி-மாசுபோக்கிச் சுத்தஞ் செய்து. சகசண்டி-மானமில்லாதவன், வெட்கமில்லாத கயவன். என் சாற்றினும் - என்னநல்லுபதேசஞ் செய்தாலும். உலுத்த குணம்-இழிகுணம். எழுபிறப்பு-தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. கடையாம்- கடைப்பட்டதாகும்.

12. கருதியநூல் கல்லாதான் மூடனாகுங்
கணக்கறிந்து பேசாதான் கசடனாகும்
ஒருதொழிலு மில்லாதான் முகடியாகும்
ஒன்றுக்கு முதவாதான் சோம்பனாகும்
பெரியோர்கண் முன்னின்று மரத்தைப்போலப்
பேசாம லிருப்பவனே பேயனாகும்
பரிவுசொலித் தழுவினவன் பசப்பனாகும்
பசிப்பவருக் கிட்டுண்ணான் பாவியாமே.

கருதிய-நன்குமதிக்கத்தக்க. கணக்கு-முறை, அளவு, காரியம். கசடன்-கீழ்மகன். முகடி-மூதேவி. பரிவுசொல்லி-(உள்ளன்பில்லாமல்) அன்புடையவன்போற் பேசி. பசப்பன்-ஏய்ப்பவன், மோசக்காரன்.

13. தாங்கொணு வறுமைவந்தால்
சபைதனிற்செல்ல நாணும்

வேங்கைபோல்வீரங் குன்றும்
விருந்தினர்க்காண நாணும்
பூங்கொடி மனையாட்கஞ்சும்
புல்லருக் கிணங்கச் செய்யும்
ஓங்கியவறிவு குன்றும்
முலகெலாம் பழிக்குந்தானே.

தாங்கொணு - தாங்கவொண்ணாத: பொறுப்பதற்கு அரிய. வறுமை-தரித்திரம். நாணும்-வெட்குவான். வேங்கைபோல் வீரம்-வேங்கைப்புலியின் வீரம்போன்ற வீரம். குன்றும்-குறையப்பெறு வான். பூகொடி மனையாட்கு - பூங்கொடிபோலும் மெல்லிய அழகிய இடையையுடைய மனைவிக்கு. புல்லருக்கு-அற்பர்க்கு. ஓங்கிய அறிவு-வளரத்தக்க உயர்ந்த புத்தி.

14. அரும்புகோணி லதுமணங்குன்றுமோ
கரும்புகோணிடிற் கட்டியும்பாகுமாம்
இரும்புகோணிடில் யானையை வெல்லலாம்
நரம்புகோணிடி னமதற் கென்செய்வோம்.

அரும்பு-பூவரும்பு. கட்டி-வெல்லக்கட்டி. கோணிய இரும்பு யானையைச் சிட்சித்தற்கு உரிய கருவியாகிய மாவெட்டியாகும் என்க. நரம்பு கோணிடில்-தேகநரம்புகள் கோணி கிரியாணதசை ஒருவனுக்கு வந்தால்.

15. வேதமோதிய வேதியர்க் கோர்மழை
நீதிமன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாதமூன்று மழையெனப் பெய்யுமே.

ஓதிய-ஓதுந்தன்மையுள்ள. நீதிநெறி மன்னர்க்கு எனமாற்றுக. நீதிநெறி-நீதிவழி. மாதர்-அழகிய. கற்பு-பதிவிரதா தருமம்.

16. அரிசிவிற்றிடு மந்தணர்க் கோர்மழை
வரிசைதப்பிய மன்னருக் கோர்மழை
புருடனைக்கொன்ற பூவையர்க் கோர்மழை
வருடமூன்று மழையெனப் பெய்யுமே.

வரிசை தப்பிய-நியாயந்தவறிய; இச்செய்யுள் செய்தவர் காலத்தில் வரிசைதப்பிய மன்னர் பலர் இருந்தன ரென்க. பூவையர்-பெண்கள்.

17. திருப்பதி மிதியாப் பாதஞ்
சிவனடி வணங்காச் சென்னி
இரப்பவர்க் கீயாக் கைக
ளினியசொற் கேளாக் காது
புரப்பவர்தங்கள் கண்ணீர்
பொழிதரச் சாகாத் தேகம்

இருப்பினும் பயனென் காட்டி
எரிப்பினு மில்லைதானே.

திருப்பதி-கடவுள் எழுந்தருளியுள்ள திவ்ய க்ஷேத்திரம்: திருப்பதியென்பது, ஒரு விஷ்ணுஸ்தலத்தையுங் குறிக்கும். இரப்பவர்க்கு-யாசிப்பவர்க்கு. புரப்பவர்-இரட்சிக்கிற தலைவர்கள் அல்லது அரசர்கள். கண்ணீர் பொழிதர-கண்களினின்று நீர் பொழியக்கண்டும்; அன்றி, அவர்கள் உருக்கங்கொண்டு தம்மைக்குறித்துக் கண்ணீர்விடும்படி (அவர்க்காக உயிர்விடாததேகம்) என்னவுமாம்.

18. வீணர் பூண்டாலுந் தங்கம்
வெறும்பொய்யா மேற்பூச் சென்பார்
பூணுவார் தராப்பூண்டாலும்
பொருந்திய தங்கமென்பார்
காணவே பனைக்கீ ழாப்பாற்
குடிக்கினுங் கள்ளே யென்பார்
மாணுலகத்தோர் புல்லர்
வழங்குரை மெய்யென்பாரே.

வீணர்-பயனில்லாதவர்களாகிய ஏழைகள். தங்கம்பூண்டாலும் என மாற்றுக. வெறும்பொய்யாம்-வெறும் பொய்யாகிய;போலியாகிய. மேற்பூச்சு-மேலே மாத்திரம் தங்கம் பூசப்பட்டுள்ள தாழ்ந்த வுலோகத்தாலாகிய நகை. பூணுவார்-பொன்னாபரணந்தரிக்கத்தக்க

செல்வர்கள். தரா-ஓர் உலோகம். காணவே-பலருங்காண. அப்பால்-பசுவின்பால். " பனைமரத்தின்கீழிருந்து பாலைக்குடித்தாலுங் கள்ளைக்குடித்தானென்பர் " என்பது, பழமொழி. மாண் உலகத்தோர்-பெருமைபொருந்திய உலகத்திலுள்ளவர்கள். புல்லர்-கீழோர். வழங்கு உரை-உரைக்கும் சொல்.

19. அரவினை யாட்டுவாரு மருங்களி றாட்டுவாரும்
இரவினிற் றனிப்போவாரு மெறியுநீர் நீந்துவாரும்
புரையுறப் பிறர்மனைச்செல்வப் பொருள்களவாடுவாரும்
அரசனைப் பகைத்திட்டாரு மாருயி ரிழப்பர்தாமே.

அரவினை-சர்ப்பத்தை. அரு களிறு-கிட்டுதற்கரிய மதயானையை. ஊட்டுவார்-உண்பிக்கின்றவர்: யானைப்பாகர். தனி-ஒன்றியாகத் தனிவழியில். போவார்-பிரயாணஞ்செய்பவர். " அஞ்சாமற் றனிவழியே போகவேண்டாம் " என்பது, பெரியோருரை. எறியும் நீர்-அலைமோதப்பெற்ற நீர்: வெள்ளம். புரை உற-குற்றம்பொருந்த; பழிபாவங்கள் உண்டாக. ஆருயிர்-அருஉயிர்; அருமையாகிய உயிர்.

20. வாழ்வது வந்தபோது மனந்தனின் மகிழவேண்டாந்
தாழ்வது வந்ததானுற் றளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்ததானு லொருவரால் விலக்கப்போமோ
ஏழையாயிருந்தோர் பல்லக்கேறுதல் கண்டிலீரோ.

தக்கோர்-மேலோர். ஊழ்வினை-விதியினால் நேரும் சுகதுக்கங்கள். கண்டிலீரோ- நீங்கள் பார்த்ததில்லையோ?

21\. பெருத்திடுசெல்வமாம்பிணி வந்துற்றிடில்
உருத்தெரியாமலே யொளிமழுங்கிடும்
மருத்துளதோவெனில் வாகடத்திலை
தரித்திரமென்னு மோர்மருந்திற் றீருமே.

உற்றிடில் - வந்து கூடினால். உரு-உருவம். ஒளி-கண்ணொளி. மழுங்கிடும்-குறையும். அற்பர்க்குச் செல்வம்வந்தால் அவர்கள் இறுமாப்பால் தம்முன்னுள்ள எளியவர்களைக் காணாதவர்களைப்போல் கவனிக்காமல் அலக்ஷ்யஞ்செய்வாராதலால், அவர்களுக்குக் கண்ணொளிமழுங்கிவிடுமென்று கூறப்பட்டது. "சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந்துற்ற ஞான்றே, வறிய புன்செருக்குமூடி வாயுள்ளார் மூகராவர், பறியணி செவியுளாரும் பயில்தரு செவிடராவர், குறி பெறு கண்ணுளாரும் குருடராய்முடிவ ரன்றே" என்பது, குசேலோபாக்கியானம். மருத்து-மருந்து. வாகடம் என்பது-வைத்திய நூல். செல்வர் தமக்குத் தரித்திரம் வந்தால் முன்னிருந்த இறுமாப் பொழிந்து கண்தெரியப்பெறுவ ரென்க.

22\. அத்தியின்மலரும் வெள்ளை
யாக்கைகொள் காக்கைதானும்
பித்தர்தம்மனமு நீரிற்
பிறந்தமீன் பாதந்தானும்
அத்தன்மால் பிரமதேவ
னளவிடப்பட்டாலுஞ்

சித்திரவிழியார்நெஞ்சந்
தெளிந்தவ ரில்லைகண்டீர்.

அத்தி-அத்திமரம். ஆக்கை=யாக்கை-உடல். அத்தன்-சிவன்; மால்-விஷ்ணு. அளவிடப்பட்டாலும்-அளவிட்டு அறியப்பட்டாலும். எனவே, இவை யாராலும் அறியப்படாமை வெளியாம். சித்திரம் விழியார்-பேரழகுவாய்ந்த கண்களையுடைய பெண்கள். தெளிந்தவர் - நிச்சயித்து அறிந்தவர்.

23. புத்திமான்பலவானவான் பலமுளான்புத்தியற்றால்
எத்தனைவிதத்தினாலு மிடராகு வந்தேதீரும்
மற்றொருசிங்கந்தன்னை வனமுயல் கூட்டிச்சென்றே
உற்றதோர்கிணற்றிற்சாயல்காட்டியகதையை ஓர்வீர்.

மற்று-அசை. வனம் முயல்-காட்டிலுள்ள முயல். உற்றது-பொருந்திய. சாயல்-பிரதிபிம்பம். ஒன்றை-ஒரு கதையை. ஓர்வீர்-அறிவீர். இக்கதையைப் பஞ்சதந்திரத்திற்காண்க.

24. ஆசாரஞ்செய்வாராகி லறிவொடு புகழுமுண்டாம்
ஆசாரநன்மையாலே லவனியிற் றேவராவார்
ஆசாரஞ்செய்யாராகி லறிவொடுபுகழுமற்றுப்
பேசார்போற்பேச்சுமாகிப்பிணியொடுநரகில்வீழ்வார்

ஆசாரம்-ஒழுக்கம். அவனி-பூமி. பேசார்போல் பேச்சும் ஆகி-ஊமைகள் போல் (குறிப்பினாற்) பேசி; என்றது பேசமுடியா

மல் வாயடைத்து என்றவாறும். பிணியொடு-(இம்மையில்) வியாதியை அநுபவிப்பதோடு. நரகில் வீழ்வார்-(மறுமையில்) நரகத்தில் விழுந்துகிடப்பர்.

25. செல்வம் வந்துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிதுபேணார்
சொல்வனவறிந்துசொல்லார் சுற்றமுந்துணையுநோக்கார்
வெல்வதேகருமமல்லால் வெம்பகைவலிதென்றெண்ணார்
வல்வினைவிளைவுமோரார் மண்ணின்மேல்வாழுமாந்தர்.

வந்துற்ற காலை - வந்துசேர்ந்தபொழுது. பேணார் - விரும்பித் தியானிக்கமாட்டார். சுற்றம்-உறவினர். துணை-துணைவர், நண்பர், உதவி. பேணார்-பாதுகாக்கமாட்டார். கருமம்-காரியம். வெம் பகை-கொடிய பகை. வலிது-பலமானது. வல் வினை விளைவு-கொடிய பாவம் சம்பவித்தல். மாந்தர்-மனிதர்.

26. யானையைச் சலந்தனி லிழுத்த வக்கரா
பூனையைக் கரைதனிற் பிடிக்கப்போகுமோ
தானையுந் தலைவருந் தலம்விட்டேகினாற்
சேனையுஞ் செல்வமுந் தியங்குவார்களே.

கரா - முதலை. தானை-சேனை. தலைவர் - அரசர். தலம்-இருப்பிடம். ஏகினால் - சென்றால். சேனையும் செல்வமும் தியங்குவார்கள்-சதுரங்கசைனியமும் ஐசுவரியமும் நிலைகுலையப்பெற்று மயங்குவார்கள்.

27. மயில் குயில் செங்காலன்னம்
வண்டு கண்ணாடி பன்றி
அயிலெயிற்றரவு திங்க
ளாதவனாழி கொக்கோ
டுயரும்விண் கமலம் பன்மூன்
றுறுகுணமுடையோர்தம்மை
இயலுறு புவியோர்போற்று
மீசனென் றெண்ணலாமே.

செம் கால் அன்னம் - சிவந்த கால்களையுடைய அன்னப்பறவை. அயில் எயிறு அரவு - கூர்மையான பற்களையுடைய பாம்பு. திங்கள்-சந்திரன். ஆதவன்-சூரியன். ஆழி-சமுத்திரம். உயரும் விண்-உயர்ந்த ஆகாயம். பன்மூன்று-பதின்மூன்றினிடத்தும். உறு குணம்-பொருந்திய குணங்கள். இயல் உறு-குணம்பொருந்திய. புவியோர்- உலகத்திலுள்ளவர். போற்றும்-வணங்கித்துதிக்கத்தக்க. மயில்முதலாகக் கூறப்பட்ட பதின்மூன்றினிடத்தும் அமைந்த குணங்களை ஆசிரியர்களிடத்துக் கேட்டறிக. விரிப்பின் பெருகும்.

28. மங்குலைம்பதினாயிரம் யோசனைமயில்கண்டு நடமாடும்
தங்குபானுநூறாயிரம்யோசனைதாமரைமுகம்விள்ளும்
திங்களாதவற்கிரட்டியோசனையுறச்சிறந்திடுமரக்காம்ப
லெங்களுக்குமன்பராயிருப்பவரிதயம்விட்டகலாரே.

மங்குல்-மேகம். யோசனை-யோஜனை; நான்குகாதம்; காதம்-ஏழரைநாழிகை வழி. நடம் ஆடும்-நர்த்தனஞ்செய்யும். தங்கு பானு-(சிறப்புப்) பொருந்திய சூரியன். முகம் விள்ளும்- முகமலர்ச்சி கொள்ளும்; மலரும். ஆதவற்கு-சூரியனுக்கு. ஆதவற்கு இரட்டி யோசனை-சூரியன் உள்ள தூரத்திலும் இருமடங்கு அதிகமான தூரம்; என்றது-இருநூறாயிரம் யோசனைதூரம். சிறந்திடும் - மலர்ந்து சிறப்படையும். அரக்கு ஆம்பல் - செவ்வாம்பல். எங்கண் ஆயினும்- எவ்விடத்திலிருந்தாலும்; எவ்வளவுதூரத்திலிருந்தாலும். இதயம்- ஹ்ருதயம். அகலார்-நீங்கார், பிரியார்.

29. சந்திரனில்லா வானந் தாமரையில்லாப் பொய்கை
மந்திரியில்லா வேந்தன் மதகரியில்லாச் சேனை
சுந்தரப்புலவரில்லாத் தொல்சபை சுதரில்வாழ்வு
தந்திகளில்லா வீணை தயையிலாவறத்தைப்போலாம்.

பொய்கை-குளம். மதகரி-மதயானை. சுந்தரம் புலவர்-அழகிய கல்வித்தேர்ச்சியுடையவர்; வித்துவான்கள். தொல்-பழைய. சுதர் இல் வாழ்வு-மக்களில்லாத இல்வாழ்க்கை. தயை இலா அறம்- அருளில்லாமற் செய்யும் தருமம்.

30. பொருளிலார்க்கின்பமில்லை புண்ணியமில்லை யென்று
மருவியகீர்த்தியில்லை மைந்தரிற் பெருமையில்லை
கருதியகருமமில்லை கதிபெற வழியுமில்லை
பெருநிலந்தனிற் சஞ்சாரப்பிரேதமாய்த் திரிகுவாரே.

மருவிய கீர்த்தி-(சிறப்பு) பொருந்திய புகழ். மைந்தரின் பெருமை-மக்களின் நன்குமதிப்பு. கருதிய கருமம்-நினைத்த காரியத்தை முடிக்கும் திறம். கதி-நற்கதி. பொருளால் அறமும், அறத்தால் நற்கதியும் கிடைப்பதாதலால், நற்கதிக்குப் பொருள் காரணமாதலை அறிக. பெருநிலந்தனில்-பெரிய நிலவுலகத்தில். சஞ்சாரப் பிரேதம்-நடைப்பிணம்.

31\. தூம்பினிற் புதைத்த கல்லுந்
துகளின்றிச் சுடர்கொடாது
பாம்புக்குப் பால்வார்த்தென்றும்
பழகினும் நன்மைதாரா
வேம்புக்குத் தேன்வார்த்தாலும்
வேப்பிலை கசப்புமாறா
தாம்பல நூல்கற்றாலுந்
துர்ச்சனர் தக்கோராகார்.

தூம்பு-பலரும் நடக்கும் வழி, பாதை. துகள் இன்றி-களங்கமில்லாமல் தேய்ந்து மாசுநீங்கி. சுடர்-ஒளி. ஆம் பல நூல்-மேலாகிய அநேக சாஸ்திரங்களை. துர்ச்சனர்-கீழ்மக்கள்.

32\. கல்லாத மாந்தரையுங் கடுங்கோபத் துரைகளையுங்
காலந் தேர்ந்து
சொல்லாத வமைச்சரையுந் துயர்க்குதவாத் தேவரை
சுருதி நூலில் [யுஞ்

வல்லாவந்தணர்தமையுங்கொண்டவனோ டெந்நாளும் வலது பேசி
நல்லார்போ லருகிருக்கு மனைவியையு மொருநாளு நம்பொணாதே.

கல்லாத - படிக்காத. கடு கோபம் - கொடிய மிக்க கோபம். காலம் தேர்ந்து-வருங்கால நிகழ்ச்சிகளை (நுட்பமான அறிவினால்) ஆராய்ந்தறிந்து; அல்லது, ஆராய்ந்தறிந்தும். அமைச்சர்-மந்திரிகள். "மந்திரிக்கழகு வரும்பொரு ளுரைத்தல்" என்பது காண்க. துயர்க்கு-துன்பம் வந்த விடத்தில்; சங்கடகாலத்தில். சுருதி - வேதம். வல்லா - வல்லவரல்லாத. கொண்டவனோடு - மணஞ்செய்து கொண்டகணவனோடு. வலது-வல்லமை, வீரம். நம்பொணாது-நம்ப வொண்ணாது; நம்பக்கூடாது.

33. தேளதுதீயில்வீழ்ந்தாற் செத்திடாதெடுத்தபேரை
மீளவேகொடுக்கினாலே மெய்யுறக் கொட்டலாலே
எளனம்பேசித்தீங்குற்றிருப்பதை யெதிர்கண்டாலுங்
கோளினர்தமக்கு நன்மைசெய்வது குற்றமாமே.

மெய் உற - உடம்பிற் பதிய. எளனம் பேசி - பரிகாசவார்த்தைகள்சொல்லி; இகழத்தக்க சொற்களைப் பேசி; அல்லது, பிறரால் இகழ்ந்து பேசப்பட்டு. தீங்கு உற்று-துன்பமடைந்து. கோளினர்-தீயோர், கோட்சொல்பவர், கொலைசெய்பவர்.

34. அறிவுளோர்தமக்கு நாளு
மாசருந் தொழுதுதாழ்வார்
நிறையொடு புவியிலுள்ளோர்
நேசமாய் வணக்கஞ்செய்வார்
அறிவிலோர்தமக்கியாதோ
ரசடது வருமேயாகில்
வெறியரென் றிகழ்வாரென்று
மேதினியுள்ளோர்தாமே.

நாளும் - எந்நாளும். தாழ்வார் - கீழ்ப்படிவார், அடங்கியிருப்பார். நிறையொடு - பயத்தோடு, உறுதிப்பாட்டோடு, மரியாதையாகிய வரையறைப்பாடு. அசடு-கீழ்மை, குற்றம். வெறியர்-பித்தர். மேதினி-பூமி. 'இகழாரென்றும் மேதினியுள்ளோர் தாமே' என்பதும் ஒரு பாடம்.

35. மெய்யதைச்சொல்வராகில் விளங்கிடுமேலாநன்மை
வையக மவரைக்கொள்வார் மனிதரிற் றேவராவர்
பொய்யதைச் சொல்வராகிற் போசன மற்பமாகும்
நொய்யவரிவர்களென்று நோக்கிடாரறிவுள்ளோரே.

மேலாம் நன்மை-மேன்மையாகிய நல்லபுகழ். 'ஏலுநன்மை' என்றும் பாடம்உண்டு; ஏலும்-ஏற்ற, தக்க. வையகம்-பூமியிலுள்ளவர். அவரைகொள்வார்-அம்மெய்யுரைப்பவரை உபசரித்துஏற்றுக்கொள்

வார்கள். நொய்யவர்-அற்பர். 'நொய்பரிசியர்கள்' என்றும் பாடம்; அதற்கும், நொய்ப்பரிசிபோன்றவர்கள் [அற்பர்கள்] என்றேபொருள் கொள்க. நோக்கிடார்-லக்ஷ்யஞ்செய்யார்.

36. தந்தையுரை தட்டினவன் றாயுரை யிகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்த மாணையை மறந்தோன்
சந்தமுறு வேதநெறி தாண்டினவ னால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வதுமெய் கண்டீர்.

தட்டினவன் - மறுத்தவன், திரஸ்கரித்து நடந்தவன். அந்தம் உறு-அழகுபொருந்திய. தேசிகர்-குரு. ஆணை-கட்டளை. சந்தம் உறு-அழகுபொருந்திய. 'வந்தமுறை வேதநெறி மாறினவர்' என்றும் பாடம்; அதற்கு - தொன்றுதொட்டு வந்த முறையாகிய வேத வழியைக் கடந்து நடந்தவர் என்று பொருள். செம் தழலின் வாயினிடை - சிவந்த அக்கினிமயமாகிய நரகத்தின்வாயில்.

37. ஏரிநீர் நிறைந்தபோதங் கிருந்தன பட்சியெல்லா
மாரிநீர் மறுத்தபோது வந்ததி லிருப்பதுண்டோ
பாரினை யாளும் வேந்தன் பட்சமு மறந்தபோதே
யாருமே நிலையில்லாம லவரவ ரேகுவாரே.

மாரி-மேகம். நீர் மறுத்தபோது - மழை பொழியாதபோது. பாரினை-பூமியை. பட்சம்-உருக்கம், நேசம். யாருமே நிலை இல்லாமல்-ஒருவரும் (நேசமில்லாத அரசனிடம்) நிலைத்திராமல் (விலகி). ஏகுவார்-(நேசமுள்ளாரிருக்குமிடத்தை நாடிச்) செல்வார்.

38. மண்ணார் சட்டி கரத்தேந்தி
மறநாய் கௌவுங் காலினராய்
அண்ணாந்தேங்கியிரப்பாரை
யறிந்தோ மறிந்தோ மம்மம்மா
பண்ணார் மொழியார் பாலடிசில்
பைம்பொற் கலத்திற் பரிந்தூட்ட
உண்ணாநின்றபோ தொருவர்க்
குதவாமாந்த ரிவர்தாமே.

மண் ஆர் சட்டி - மண்ணினாலாகிய சட்டி; மண்சட்டி. கரத்து - கையில். மறம்-கோபம், கெடுதி. காலினர்-காலினையுடையவர். இரப்பார்-யாசிப்பவர். 'அண்ணாந்தேங்கி யிருப்பாரை' என்றும் பாடம்; அதற்கு - எங்கு அன்னம்கிடைக்குமோ என்று ஏக்கமுற்று அண்ணாந்துபார்த்து யோசித்துக்கொண்டிருக்கும் பிச்சைக்காரர்களை என்று பொருள். அறிந்தோம்-(அவர்கள் முற்பிறப்பில் எப்படியிருந்தவர்களென்பதைப் பற்றி) அறிந்துகொண்டோம். பண் ஆர் மொழியார்-இசைப்பாட்டுப்போன்ற செவிக்கினிய சொல்லையுடைய மகளிர்; இது, இங்கு மனைவியரைக் குறிக்கும். பால் அடிசில் - பாற்சோறு. பைம்பொற்கலத்தில் = பசுமை + பொன் + கலத்தில்; பசும் பொன்னாலாகிய பாத்திரத்தில். பரிந்து-அன்புகொண்டு. ஒருவர்க்கு உதவா - ஒருவர்க்கும் கொடாத. இவர்தாமே - (இப்போது இரக்கின்ற) இவர்களே.

39. மண்டலத்தோர்கள் செய்த
பாவமன்னவரைச் சேருந்

திண்டிறன் மன்னர் செய்த
தீங்கு மந்திரியைச் சேருந்
தொண்டர்கள் செய்த தோஷந்
தொடர்ந்து தங்குருவைச் சேருங்
கண்டன மொழியாள் செய்த
கன்மமுங் கணவற்காமே.

மண்டலத்தோர்கள்-மண்ணுலகத்தவர்கள். மறம்-பாவம், அதர்மம். திண் திறல் - வலிமையும் பராக்கிரமும் பொருந்திய. தொண்டர்கள்-அடியார்கள், சிஷ்யர்கள். கண்டு அன மொழியாள் - கற்கண்டுபோலும் இனிய சொல்லையுடைய மனைவி. கன்மம்-தீச்செயல், பாவம்.

40. ஆவீன மழைபொழிய வில்லம்வீழ
அகமுடையாண் மெய்ந்நோவ வடிமை சாவ
மாவீரம் புலர்வதென விதைகொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ள
கோவேந்த ருழுதுண்ட கடமை கேட்கக்
குருக்கள்வந்து தட்சிணைக்குக் குறுக்கேநிற்கப்
பாவலர் கவிபாடிப் பரிசுகேட்கப்
பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணாதே.

ஆ ஈன - பசு கன்றைப்பெற; தலையீற்றுப்பசு கன்றுபோடுவதற்குச் சிரமப்பட என்க. இல்லம்-வீடு. அகம் உடையாள்-மனைவி.

மெய் நோவ - பிரஸவவேதனைப்பட. அடிமை-அடிமையாள். மா-வயல். மா ஈரம்-சிறந்தஈரம் எனினுமாம். புலர்தல்-காய்தல், வாடல். மறித்துக்கொள்ள-(போகக்கூடாதென்று) தடுக்க. கோ வேந்தர்-சிறப்புடைய அரசர்; இனி, கோ வேந்தர்-பூமிக்குத் தலைவரான அரசர்கள் எனினுமாம்; கோ - மேன்மை, பூமி. கடமை-தீர்வைப் பணம். பாவாணர்-பாடலியற்றி வாழ்பவர், கவிஞர். பரிசு-சம்மானம். பார்க்க ஒண்ணாது-பார்க்கச் சகிக்காது. 'அகத்தடியாள்' என்றும், 'மாவீரம் போவதென்று' என்றும், (மூன்றாம் நான்காம் அடிகள்) 'சாவோலை கொண்டொருவ னெதிரே செல்லத் தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பந் தீண்டக், கோவேந்த ருழுதுண்ட கடமை கேட்கக் குருக்களோ தக்ஷிணைகள் கொடுவென்றாரே' என்றும் பாடம்.

41. நிலைதளர்ந்திட்டபோது நீணிலத் துறவுமில்லை
சலமிருந்தகன்றபோது தாமரைக் கருக்கன்கூற்றம்
பலவனமெரியும்போது பற்றுதீக்குறவாங் காற்று
மெலிவதுவிளக்கேயாகின் மீண்டுமக்காற்றேகூற்றாம்.

நிலைதளர்த்திட்டபோது-செல்வநிலை மாறியபோது; செல்வம் போய் வறுமைவந்தவளவில். நீள் நிலத்து-பெரிய நிலவுலகத்தில். அகன்றபோது-வற்றிப்போய்விட்டகாலத்தில். அருக்கன்- சூரியன். கூற்றம்-யமன். நீருள்ளபோது தாமரையைச் சூரியன் செழித்து மலரச்செய்யும். நீர்வற்றியவளவில் தாமரை சூரியனால் வாடுதலால், அப்போது தாமரைக்குச் சூரியன் யமனாக [சத்துருவாக]க் கூறப் பட்டான். மெலிவது விளக்கேயாகில் - சிறிய விளக்குருபமாகத் தீ இருக்குங்கால். வனத்திற் பற்றிய தீயைக் காற்று மேன்மேல்

மூளச்செய்தலால் அத்தீக்குக் காற்று உறவாகச் சொல்லப்பட்டது. சிறிய விளக்குத்தீயைக் காற்று அணைத்துவிடுதலால், அதற்குக் காற்று யமனாகக் கூறப்பட்டது.

42. கற்பூரப்பாத்திகட்டிக் கஸ்தூரியெருப்போட்டுக்
 கமழ்நீர் பாய்ச்சிப்
பொற்பூர வுள்ளிதனைவிதைத்தாலு மதன்குணத்தைப்
 பொருந்தக் காட்டும்
சொற்பேதையர்க்கறிவிங் கினிதாக வருமெனவே
 சொல்லினாலும்
நற்போதம் வாராதாங் கவர்குணமேமேலாக
 நடக்குந்தானே.

கற்பூரம்-பச்சைக்கற்பூரத்தால். கமழ் நீர்-வாசனைநீர்; பனிநீர். பொற்பு ஊர-அழகுண்டாக. உள்ளி-வெண்காயம், வெள்ளைப்பூண்டு. அதன்குணம் என்றது-அதன் நாற்றம். சொல் பேதையர்-இகழ்ச்சிச் சொல்லுக்கு உரிய அறிவில்லாதோர். நல்போதம்-நல்லறிவு. கவர் குணம்-அறியாமையாலாகிய மயக்கம், பேராசைப்படல், கொள்ளையிடல், திருடல் முதலிய குணஞ்செயல்கள்.

43. பொல்லார்க்குக்கல்விவரில் கருவமுண்டா மதனோடு
 பொருளுஞ் சேர்ந்தால்
சொல்லாதுஞ் சொல்லுவிக்குஞ் சொற்சென்றாற்குடி
 துணிவர் கண்டாய் [கெடுக்கத்

நல்லோர்க்கும் மூன்றுகுணமுண்டாகி லருளதிக
ஞான முண்டாம்
எல்லோர்க்கு முபகார ராயிருந்து பாகதியை
யெய்துவாரே.

சொல்லாதும் சொல்லுவிக்கும் - சொல்லத்தகாததியசொல்லை யும் சொல்லும்படிசெய்யும். சொல் சென்றால்-செல்வாக்கு உண்டானால்; சொல் எங்கும் செல்லத்தக்கதாயிருந்தால். பரகதியை எய்துவார்-முத்தியை யடைவார்கள்.

44. சலதாரை வீழு நீருஞ்
சாகரந்தன்னைச் சார்ந்தாற்
குலமென்றே கொள்வதல்லாற்
குரைகடல் வெறுப்பதுண்டோ
புலவர்கள்சபையிற் கூடிப்
புன்கவியாளர்சார்ந்தால்
நலமென்றே கொள்வதல்லா
னவில்வரோ பெரியோர்குற்றம்.

சாகரம்-சமுத்திரம். குலம்-தன்னினம், உயர்ந்த சாதி. குரை கடல்-ஒலிக்குந்தன்மையுள்ள சமுத்திரம். புன்கவியாளர் - அற்பக் கவிஞர்; போலிவித்துவான்கள். நலம்-மேன்மை. நவில்வரோ-கூறு வரோ? [கூறார்.]

45. வில்லைது வளைந்ததென்றும்
வேழம துறங்கிற்றென்றும்
வல்லியம் பதுங்கிற்றென்றும்
வளர்கடாபிந்திற்றென்றும்
புல்லர்தஞ் சொல்லுக் கஞ்சிப்
பொறுத்தனர் பெரியோரென்றும்
நல்லதென் றிருக்கவேண்டா
நஞ்செனக்கருதலாமே.

வேழம்-யானை. 'வேழமா' என்றும் பாடம்; மா-மிருகம். வல்லியம்-புலி. வளர் கடா-வளர்ந்த கடா; கடா-ஆடு எருமை இவற்றின் ஆண். பிந்திற்று - பின்வாங்கிற்று; பின்னுக்குப் போயிற்று. புல்லர்-கீழ்மக்கள். நஞ்சு-விஷம். வில்வளைதல் அம்பெய்து பகை வீழ்த்துதற்கும், யானை உறங்கினாற்போலிருத்தல் தன்னால் கறுவைக்கப்பட்ட அவர் அறியாதநிலையில் [அயர்ந்தநிலையில்] மோதுதற்கும், புலிபதுங்குதலும் கடா பின்வாங்குதலும் பகைமேற் பாய்வதற்கும், பெரியோர் பொறுத்தல் புல்லரைக் கருவறுத்தற்குமென அறிக.

46. வேலியானது பயிர்தனை மேய்ந்திட மதித்தாற்
காலனானவ னுயிர்தனைக் கவர்ந்திட நினைத்தா
லாலமன்னையர் பாலகர்க் கருத்துவாரானான்
மேலிதோர்ந்துடன் யார்கொலோவிலக்குவர்வேந்தே.

விதித்தால்-செய்தால். மேய்ந்திடவிதித்தால்-மேய்ந்திடுதலைச் செய்தால்; மேய்ந்தால் என்று கருத்து.'மதித்தால' என்றும் பாடம்; எண்ணினால் என்று பொருள். காலன்-யமன். கவர்ந்திட-அபகரிக்க. ஆலம்-விஷம். பாலகர்க்கு-(தன்)குழந்தைகட்கு. மேல்-அதன்மேல். இது ஓர்ந்து-இச்செயலை அறிந்து. யார்கொலோ விலக்குவர் - யார் தடுப்பவர்? [தடுப்பவரில்லை யென்றபடி.]

47. ஆவுக்காயினு மந்தணர்க் காயினும்
யாவர்க்கானு மெளியவர்க் காயினுஞ்
சாவப்பெற்றவரே தகைவானுறை
தேவர்க்குந்தொழுந் தேவர்க ளாகுவார்.

ஆவுக்கு ஆயினும்-பசுக்களைக் காப்பதற்கானாலும். யாவர்க்கு ஆனும்-(இன்னும் மற்றை) எவர்களைக் காப்பதற்கானாலும். எளியவர்-வலிமையுஞ் செல்வமு மில்லாதவர்; ஏழைகள். சாவப்பெற்றவரே-(உதவிசெய்து) இறக்கப்பெற்றவர்கள்தாமே. தகை வான் உறை-பெருமைபொருந்திய சுவர்க்கலோகத்தில் வசிக்கிற. உதவிசெய்வதால் இறந்தவர் தேவர்களுள்ளுஞ்சிறந்த தேவரென்றபடி.

48. தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னவராயி னுயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின்னெறி
புக்கவே லவ்விலங்கும் புத்தேளிரே.

நக்க-தகுதியானவை, இன்ன-இவை, நகாதன-தகுதியல்லாதவை, இன்ன-இவை, என்று, ஒக்க-(நீதிநூல் முறைமைக்குப்) பொருந்த, உன்னவர் ஆயின்-எண்ணுதவர்களாயின், உயர்ந்து உளமக்களும்-(எல்லாப்பிராணிகளிலுஞ்) சிறந்துள்ள மனிதர்களாயினும், விலங்கே - மிருகத்துக்கு ஒப்பானவர்களே; மனுவின் நெறிபுக்க ஏல் - மனுதர்மசாஸ்திரத்திற் கூறப்பட்ட முறைமைகளிற்பொருந்தி நடந்தனவாயின், அ விலங்கும்-அம்மிருகங்களும், புத்தேளிரே - தேவர்களுக்கு ஒப்பானவையே.

உயர்ந்தபிறப்பிற் பிறந்திருந்தும் அதற்கு ஏற்ற விவேகத்தையுடையராகாத மனிதர் மிருகங்களோடு ஒப்பர்; இழிந்தபிறப்பிற்பிறந்துள்ள அந்த மிருகங்கள் தாம் தமதுபிறப்பிற்கு உரிய அறிவினும் மேம்பட்ட அவ்வுணர்வுமிகுதியோடு கூடியொழுகின் விசேஷஞானமுடைய தேவர்களுக்குச் சமானமாகும் என்பது, கருத்து.

49\. சிதைவகல் காதற்றாயைத்
தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந்தணரை யாவைப்
பாலரைப் பாவைமாரை
வதைபுரிகுநர்க்கு முண்டா
மாற்றலா மாற்றன் மாயா
வுதவிகொன்றார்க் கொன்றேனு
மொழிக்கலா முபாய முண்டோ.

சிதைவு அகல் காதல் தாய்-கெடுதலில்லாத அன்பையுடைய தாய். தெய்வப்பதவி அந்தணர்-தெய்வத்தன்மையையுடைய பிரா

மணர்கள். ஆவை-பசுக்களை பாவைமார்-மகளிர். வதை புரிகுநர்க்கும்-கொலைசெய்பவர்களுக்கும். மாற்றல் ஆம் ஆற்றல உண்டாம்-(அந்தக் கொலைப்பாவங்களைப்) பரிகரிக்கத்தக்க உபாயமுள்ளதாம்; மாயா உதவி கொன்றாகுக்-அழியாத உபகாரத்தை மறந்தவர்கட்கோ [நன்றி மறந்தவர்க்கோ.] ஒழிக்கல் ஆம் உபாயம் ஒன்றேனும் உண்டோ-(நன்றிமறந்த) அப்பாவத்தை ஒழிக்கும்வழி யொன்றாயினும் உண்டோ? [இல்லையென்றபடி.]

மாத்ருஹத்தி, பித்ருஹத்தி, குருஹத்தி, பிரமஹத்தி, பசுஹத்தி, சிசுஹத்தி, ஸ்த்ரீஹத்தி யென்னும் கொடும்பாதகங்களுக்கெல்லாம் அப்பாவம் நீங்கும் பரிகாரமாகிய பிராயச்சித்தம் உண்டு செய்ந்நன்றி மறத்தலுக்கோ அது இல்லை யென்பதாம். இதனால், மகாபாதகங்களெல்லாவற்றினும் கொடியது இதுவெனச் செய்ந்நன்றி மறத்தலின் மிக்ககொடுமை கூறப்பட்டது; "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பது, திருக்குறள்

50. வஞ்சமுங் களவும் பொய்யு
மயக்கமு மரபில் கொட்டுந்
தஞ்சமென் றோரை நீக்குந்
தன்மையுங் களிப்புந் தாக்குங்
கஞ்சமெல் லணங்குந் தீருங்
கள்ளினை லருந்தி னோரை
நஞ்சமுங் கொல்வதல்லா
னரகினை நல்கா தன்றே.

வஞ்சம் - வஞ்சனை. மரபு இல் கொட்பும் - பழமையாகவந்த முறைமைக்கு விரோதமான கொள்கையும். தஞ்சம் என்றோரை - சரணமென்று அடைந்தவரை: அடைக்கலமடைந்தவரை. நீக்கும் தன்மையும் - பாதுகாவாது நீக்குகின்ற குணமும். களிப்பும் - செருக்கும். தாக்கும் - ஆகிய இவையெல்லாம் ஒன்று சேர்ந்து வருத்தும். கஞ்சம் மெல அணங்கும் தீரும் - செந்தாமரைமலரில் வசிக்கின்ற மெல்லியதன்மையுள்ள இலக்குமியும் விட்டு நீங்குவாள். கள்ளினால் அருந்தினோரை - மதுபானஞ்செய்தவரை. நஞ்சமும் - விஷமும். கொல்வது அல்லால் - (உண்பவரைக்) கொல்லுமேயல்லாமல். நரகினை நல்காது - (அவர்க்கு) நரகத்தைத்தராது. அன்றே - அசை.

விஷம் உண்டவரது உடம்பை மாத்திரம் அழிக்கும் [கொல்லும்]; நரகத்திற் சேர்க்காது; மதுவோ உடம்பையழித்தலோடு [கொல்லுதலோடு] நரகமாகிய தீக்கதியிலும் சேர்க்கும்; விஷத்தைவிட மது கொடியது என்பது கருத்து.

51. பெறுதற்குரிய நன்மைகளைப்
பெரிதுஞ் செய்வோரைங்குரவர்
உறுமற் றவரி லொப்பற்ற
வுதவி புரிவோன் மன்னவனே
மறுவில் லரசன் மாலெனவே
வகுத்த மன்னும் பெருநூல்கள்
உறுதி யளிக்கு மவனாணை
யொன்றி நடத்த லறமாகும்.

பெரிதும்-மிகவும். ஐங்குரவர்-ஐந்து பெரியோர்கள்; அவர்கள்-அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்பவர்கள். மறு இல்-குற்றமில்லாத. மால்-மஹாவிஷ்ணு. வகுத்த-உரைத்தன. உறுதி அளிக்கும்-நன்மையைத் தருதற்குரிய. ஆணை-கட்டளை. ஒன்றி-பொருந்தி, ஏற்றுக்கொண்டு. அறம்-தருமம்.

52 அரசுங் குருவு மனையுமற்
றன்பார் பிதாவுந் தம்முன்னும்
பொருவில் குரவ ரிவரைவர்
பொலிவார் தேவரென மதித்து
வருநாடோறும் வைகறையில்
வணங்கி யெழுதன் மரபெனவே
அருநல்லொழுக்க முரைத்திடுநா
லனைத்து முரைக்கு மாலன்றே.

மற்று-அசை. அன்பு ஆர்-அன்பு பொருந்திய. தம்முன்-தமையன். பொரு இல-ஒப்பில்லாத. பொலிவு ஆர்-விளக்கம்பொருந்திய, சிறப்புமிக்க. வைகறை-விடியற்காலம். எழுதல-எழுந்திருத்தல. மரபு-முறை. ஆல், அன்றே-அசை.

## வாழ்த்து

**வாழியைந் தாம்ஜ்யார்ஜ் மகீபன் மனைவியொடும்**
**வாழியே பல்லறமு மாண்போடும்—வாழியே**
**பைம்புயன் மாரியொடும் பாரின்கண் வாழியே**
**பம்பியான் பாலைப் பயந்து.**

*மகீபன்-பூமியைப் பாதுகாப்பவன், அரசன். பல் அறம்-பலதருமங்கள். மாண்பு-மாட்சிமை. பைம்புயல்—பசுமை+புயல்; குளிர்ச்சியுள்ள மேகம்; பசுமை-நிறமுமாம். மாரி-மழை. பம்பி-பொலிந்து, திரண்டு. ஆன்-பசு. பயந்து-தந்து.*

**A FEW OPINIONS—(Cont.)**

"Although the stories of Prahlada and Markandeya are as old as our literature, in your books they are presented in eligant chaste Tamil. Your books are also calculated to be of use to students of Tamil composition who ought to know how to write successfully narrative and descriptive pieces. I have recommended your Vyasakkovai (Model essays in Tamil) to my students."—S. ANAVARATAVINAYAKAM PILLAI ESQR., M.A., CHRISTIAN COLLEGE, MADRAS.

---

"Markandeya Charitram is as good as your Prahlada."
T. CHELVAKESAVARAYA MUDALIAR ESQR, M.A. PACHAIAPPA'S COLLEGE, MADRAS.

---

"தேவரீர் அனுப்பிய ஸ்ரீபிரகலாதாழ்வான் சரிதையைப் படித்துப்பார்த்ததில் தேவரீரது தமிழ்க்கல்வியின் முதிர்ச்சியைத் தெரிந்து மகிழ்ந்தேன். * * * * * தமிழில் நல்லநடையில (அமைந்த சிறந்த நூல) * * * * * தேவரீரது பிரகலாத சரித்திரத்தை என் மாணாக்கர்க்கேயன்றி என் குழந்தைகட்கும் கொடுத்துப் படிக்கச் செய்கிறேன்."—ஸ்ரீ உ. வே. கா. ஸ்ரீ. கோபாலாசாரியர், தமிழ்ப்பிரதம பண்டிதர், கிரிஸ்டியன் காலேஜ், சென்னை.

---

## மன்பதையாற்றுப்படை

"இப்பெயர்கொண்டதொரு சிறுநூல், வேலூர் ஊர்ஹீஸ்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பு. ந. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களால் இயற்றப்பட்டது. இது, "பள்ளிகொண்டை யென்னும் உத்தர ஸ்ரீரங்க ஸ்தலத்துத் திருமாலை வணங்கி யுய்ந்தானொருவன், அங்ஙனம் வணங்கி உய்வுபெறாத மக்கட் பரப்பை, அப்பெருமானிடத்தே ஆற்றுப்படுத்தலைக்" கூறுவது. இந்நூலின் சொன்னோக்குப் பொருணோக்கங்கள் நன்கமைந் தொளிர்தலோடு, இதன் ஆசிரியர் ஒரு சிறந்த பக்திமானென்பதும் இந்நூலால் விளங்குகிறது."—பத்திராசிரியர், செந்தமிழ்.